25.10.2018

**அசல் வழக்கு எண் 118/2014**

**வா.சா.2/ கே.எச்.அமீர்ஜான் த/பெ ஷேக் உசேன் சாயபு**

**<u>11, 12, 13 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

02.11.1970-ஆம் தேதி எனக்கும், என் அப்பா, என் அண்ணன் தம்பிகளுக்கு இடையில் ஏற்பட்ட பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் அது சரிதான். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினைப் பத்திரத்தில் என் அண்ணன் குலாப் ஜானுகது "டி" ஷெட்யூல் சொத்தும், எனக்கு "இ" ஷெட்யூல் சொத்தும் ஒதுக்கப்பட்டது என்றால் அது சரிதான் மேற்படி பாகப்பிரிவினைப் பததின் ஏற்பட்ட காலத்தில் எனக்கு 7 வயதும், என் அண்ணன் குலாப் ஜானுக்கு 10 வயடதும் இருந்துது என்றால் அது சரிதான். மேற்படி பாகபத்திரத்தில் எனக்கும் என் அண்ணன் குலாப்ஜானுககும் எங்கள் தாயார் பாத்திமா பீவியை பாதுகாவலராக நியமனம் செய்யப்பட்டிருந்தார் என்றால் அது சரிதான். மேற்படி "டி" மற்றும் "இ" ஷெட்யூலின் மொத்த பரப்பளவு 36.08 ஏக்கர் என்றால் அது சரிதான். அதில் எனக்கம் என் அண்ணன் குலாப் ஜானுக்கு பொதுவில் பாதி தலா 18.04 ஏக்கர் என்று பாகம் விடப்பட்டுள்ளது என்றால அது சரிதான். எனக்கும், குலாப் ஜானுக்கும் மற்றும் குலாப் ஜான் இறந்த பிறகு எனக்கும் கலாப் ஜானின் வாரிசுகளுக்கும் இடையீல் எநதவிதமான எழுத்து மூலமான பாகப் பத்திரமும் ஏற்படவில்லை என்றால் அது சரிதான். குலாப் ஜானின் வாரிசுகள் தாக்கல் செய்துள்ள வழக்கும் இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 22/2014 நிலுவையில் உள்ளது என்றாலும், அதில் நான் 3-வது பிரதிவாதியாக உள்ளேன் என்றாலும் அது சரிதான். மேற்படி 2.11.1970 தேதியிட்ட வா.சா.ஆ.1/பாகபத்திரத்தில் கண்ட "சி" ஷெட்யூல் சொத்து என்னுடைய மூத்த அண்ணன் அகமத் பாஷாவுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் அது சரிதான். மேற்படி "சி" இனச் சொத்தில் மூக்கம்பட்டி கிராம சொத்துக்களும் அடங்கியுள்ளது என்றால் அது சரிதான். மூக்கம்பட்டி, சாமல்பட்டி, புலியூர், மாரப்பநாயக்கன்பட்டி ஆகிய நான்கு கிராமங்களிலும் என் தந்தைக்கு சொத்துக்கள் இருந்தது என்றால் அது சரிதான். மேற்படி நான்கு கிராமங்களிலும் சேர்த்து என் தந்தைக்கு மொத்தம் 70 ஏக்கராவுக்கு மேல் சொத்துக்கள் இருந்தது என்றால் அது சரிதான். புலியூர் என்ற ஊரில் நகர பகுதியில் எங்கள் நிலத்தில் பெரிய பரப்பளவில் என் அப்பாவுக்கு சொந்தமான தேங்காய் மண்டி இருந்தது என்றர்ல அது சரிதான். வாசா.ஆ.9-ஆக தாக்கல் செய்துள்ள உயிலுக்கும் இந்த வழக்குச் சொத்துக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இலலை என்றால் அது சரிதான். என் அப்பாவுக்கு 4 மகன்கள் மற்றும் 7 மகள்கள் என்றால் அது சரிதான். மேற்படி 7 மகள்களுககும் எந்தவிதமான சொத்துக்களும் தரப்படவில்லை என்றால் அது சரிதான். எனக்கு 3 மகள்கள் என்றால் அது சரிதான். அவர்கள் பெயர் யாஸ்மின், ரெஜினா மற்றும் ஷாயின் என்றால் அது சரிதான். யாஸ்மின், ரெஜினா ஆகியோர் வாதிகள் 1 முதல் 3 வரையானவர்களுக்கு எங்கள் குடும்பச் சொத்துக்களை விற்பதற்காக ஒரு கிரைய ஒப்பந்தப் பத்திரம் போட்டு அது நான்கு ஆண்டு கழித்து ரத்து செய்யப்பட்டது என்றால் அது சரிதான். வாப.சா.ஆ.1 பாகப்பிரிவினையில் கண்ட "எ" இனச் சொத்து என் அப்பாவின் பாகத்துக்கு ஒதுக்கப்பட்டது என்றால் அது சரிதான். என் தந்தை இறந்த பிறகு மேற்படி வா.சா.ஆ.1 பாகப்பிரிவனைப் பத்திரத்தில் அவருக்கு ஒதுக்கப்பட்ட "எ" இனச் சொத்துக்கள் குறித்து இதுநாள் வரையில்

எங்களுக்குள் எவ்வித பாகப்பிரிவினையும் ஏற்படவிலலை என்றால் அது சரிதான். வா.சா.ஆ.2/செட்டில்மெண்ட் பத்திரமும், வா.சா.ஆ.9/உயில் பத்திரத்தையம் என் தந்தை எழுதி வைக்கவில்லை என்றாலும், அதனை நாங்களாகவே மோசடியாக தயார் செய்துள்ளோம் என்றால் அது சரியல்ல. வழககுச் சொத்துக்களைத் தவிர எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட இதர சொத்தக்களை இந்த வழக்கில் சொத்து விவரமாகக் காட்டப்படாத காரணத்தாலும், மற்றும், எங்ள் குடும்ப உறுப்பினர்கள் அனைவயையும் இந்த வழக்கில் தரப்பினர்களாகச் சேர்க்காத காரணத்தாலும், இநத வழக்கு நிலக்கத்தக்கதல்ல மற்றும் தள்ளுபடிக்குரியது என்றால் அது சரியல்ல. அகமத்பாஷாவுக்கு சொந்தமான சொத்துக்களைத் தான் மணிமேகலை கிரையம் பெற்றார் என்றாலும். அதனால் அந்த சொத்துக்கள் மணிமேகலைக்கு சொந்தமானது என்றாலும் அது சரியல்ல. நான் தாக்கல் செய்துளள இந்த வழக்கு செலவுத் தெகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால்அது சரியல்ல.

ஒம்/-வி.பி.சுகந்தி.எம்.எல்.,

சார்பு நீதிபதி, ஊத்தங்கரை